

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர்கள் எஸ். இரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், எஸ்.எஸ். சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, துரை வைகோ, கே.நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, தி.ராமச்சந்திரன், எம்.சின்னதுரை, பிரபாகரன், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர்கள் எஸ். இரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், எஸ்.எஸ். சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ. ராசா, துரை வைகோ, கே.நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, தி.ராமச்சந்திரன், எம்.சின்னதுரை, பிரபாகரன், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.11.2025) திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகையில், இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் கட்சி தலைவரும், கண்டி நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

### பெங்களூருவில்

# திருமதி துர்கா ஸ்டாலின் எழுதிய ‘அவரும் நானும்’ நூல் வெளியீடு!

## டாக்டர் ஜெய.ராஜமூர்த்தி சிறப்புரை! போர்முரசு கதிரவன் ஏற்பாடு!



பெங்களூரு, நவ. 11–

கர்நாடக மாநிலம் பெங்களூருவில், கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில், திருமதி துர்காஸ்டாலின் அவர்கள் எழுதிய “அவரும் நானும்” பாகம் 2 நூல் அறிமுக விழா நவம்பர் 10, 2025 அன்று காலை பெங்களூரு-வில் அமைந்துள்ள வேளாண் பல்கலைகழக கூட்டரங்கில் கருநாடக மாநில தமிழ் பத்திரிக்கையாளர்கள் சங்கத் தலைவர் முத்துமணி நன்னன் வரவேற்புரையில் மாநில இலக்கிய அணி செயலாளர் போர்முரசு கதிரவன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இவ்விழாவில் மருத்துவர் ஜெய. ராஜமூர்த்தி (மேனாள் இயக்குனர் – மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள்) கலந்து கொண்டு நூலினை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.

தலைமை இலக்கிய அணி பொருளாளரும், சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான நா.சந்திரபாபு கலந்து கொண்டு சிறப்பித்து மகிழ்ந்தார்.

மேலும் கருநாடக மாநில திராவிட முன்னேற்ற கழக அவைத் தலைவர் மா.பெரியசாமி, மாநில பொருளாளர் தட்சிணாமூர்த்தி, மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி சற்குணம் இளமதி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் முருகானந்தம், முன்னாள் தொ.மு.ச. துணை செயலாளர் ஆ.கரிகாலன் மற்றும் தங்கவயல் கரிகாலன், டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி அறக்கட்டளை குழுமத்தைச் சார்ந்த திருமதி வழக்கறிஞர் பா.பிரதிஷ்டா ராமமூர்த்தி, பா.பிரதிஷ்டா அவர்களின் கணவர் வழக்கறிஞர் ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் உடன்பிறப்புக்கள், தமிழ் சொந்தங்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாமேடையில் நூலின் சிறப்பு பிரதியை ரூபாய் 5000/ செலுத்தி பெற்று கொண்டனர்.

இறுதியாக ஏ.கே. பாபு கரிகாலன் நன்றி கூறினார்.

### S.I.R.க்கு எதிராக

# சிவகங்கையில் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்!

## மு.தென்னவன் தலைமை! அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை நவம்பர் 11.

இன்று 11ஆம் தேதி சிவகங்கையில் தேர்தல் ஆணையத்தை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இது குறித்து சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:–

முதலமைச்சர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கூட்டத்தில் தமிழ்நாட்டில் நான்காம் தேதி முதல் செயல்பட்டு வரும் எஸ்.ஐ.ஆர். சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியலை செயல்படுத்தி வரும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைநகரில் நடத்த வேண்டும் என்று முடிவு எடுத்துள்ளது. அதன்படி இன்று 11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாவட்டத்தி லுள்ள அனைத்து தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது . அதன்படி சிவகங்கை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் இன்று காலை 10 மணி அளவில் சிவகங்கை அரண்மனை வாயிலில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இதில் தலைமை கழகத்தின் சார்பில் கழக வெளியீட்டு தொடர்பாளர் நக்கீரன் என்ற ஹேங்க்ரிடன் கண்டன உரையாற்றுகிறார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட முழுவதும் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைவர்கள், மற்றும் நிர்வாகிகள் தொண்டர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு இந்த ஆர்ப்பாட்டத்தினை வெற்றிகரமாக நடத்தி தருமாறு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

### S.I.R.க்கு எதிராக

# உச்சநீதிமன்றத்தில் மேலும் 5 மனுக்கள் தாக்கல்!

## இன்று விசாரணைக்கு வருகிறது!

புதுடெல்லி, நவ.11–

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேலும் 5 மனுக்கள் கூடுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்துக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. ஏற்கனவே வழக்கு தொடர்ந்துள்ளது. அந்த மனுவில், பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் மேற்கொண்டபோது பல்வேறு குளறுபடிகள் நடைபெற்றதாகவும், இதற்கு எதிரான வழக்கில் இறுதி உத்தரவை உச்சநீதிமன்றம் இன்னும் பிறப்பிக்க வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். பணிகளை மேற்கொள்வது ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெற சில மாதங்களே உள்ள நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் மேற்கொள்வது பல்வேறு சிக்கல்களை உருவாக்கும் என்றும் தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான வாக்காளர்கள் தங்களின் வாக்குரிமையை இழக்கும் அபாயம் ஏற்படும் என்றும் மனுவில் தி.மு.க. சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேலும் 5 மனுக்கள் கூடுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தமிழ்நாடு மாநில செயலாளர் பி. சண்முகம், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, புதுச்சேரி தி.மு.க. சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சிவா மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் S.I.Rக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்திற்கு தடை கோரிய அனைத்து மனுக்களும் நீதிபதிகள் சூரியகாந்த், ஜாய்மால்யா பாக்சி அமர்வில் உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகின்றன. பீகார் வாக்காளர் பட்டியல் வழக்கும், தலைமைத்தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்துக்கு எதிரான வழக்கும் அதே அமர்வில் விசாரணைக்கு பட்டியலிடப் பட்டுள்ளது.



நேற்று (10.11.2025) தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்களை, மத்திய மெக்சிகோ, அகுவாஸ்கலியென்டஸ் மாநில கவர்னர் திருமதி மரியா தெரசா ஜிமென்ஸ் எஸ்கிவல், மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். இச்சந்திப்பின் போது, உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், அகுவாஸ்கலியென்டஸ் மாநில பொருளாதார வளர்ச்சி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அரசு செயலாளர் ஈசௌ கார்சா டி வேகா, இலக்குமுறைத் தொடர்பு (Digital Communication) இயக்குநர் ஜோஸ் ஜுலியா ரமிரஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### S.I.R.ஐ கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில்

# தேனி மாவட்டத்தில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்!

## தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. – கம்பம் என்.ராமகிருஷ்ணன் அறிவிப்பு!





தேனி, நவ.11-

தமிழ்நாட்டில் இந்தியத் தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை (S.I.R) கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என

தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டச்செயலாளர்கள் தங்கதமிழ்ச் செல்வன் எம்.பி என்.ராமகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் இந்தியத் தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை (S.I.R) கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (11.11.2025 -செவ்வாய்க்கிழமை) காலை 10:00 மணி அளவில் தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள்,ஒன்றிய, நகர் , பேரூர் நிர்வாகிகள் ,வார்டு, கிளை நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மூத்த முன்னோடிகள், பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்ச் செல்வன் எம்.பி., கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.